## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 126/2016

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 18 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.6 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 18.03.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேம்குமார் | ஜாதி | : | |
| த/பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா. 6 முன்னிலை 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. வழக்கு வாதிகள் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சிம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். தாவா வழக்கானது யார், யார் பெயரில் போடப்பட்டுள்ளது என்றால் கண்ணம்மா, செல்வி, சித்ரா ஆகிய மூவரும் பிரகாஷ் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள். 1 முதல் 3 வாதிகள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான்.

என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு நன்கு தெரியும். வாதிகள் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் என்னுடைய பாட்டி அலமேலு அம்மாளுக்கு கிடைத்த சொத்துக்களை பொறுத்து ஆவணம் எதுவும் ஏற்படுத்திக்கொடுக்க இயலாது என்றும், 1ம் பிரதிவாதி பிரகாஷ்க்கு ஏற்படுத்திக்கொடுத்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

தாவா சொத்தின் புல எண்கள் தெரியுமா என்றால் 110 ஆகும். உட்ப்பிரிவு ஞாபகமில்லை. புல எண்.110 அஷேசம் கிராமத்திலுள்ளது. 1.95 ஏக்கர் இருக்கும். சுமார் 4000

சதுரடியாகும். தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியவில்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் அலமேலு அம்மாளுக்கு அவரது தகப்பனார் எழுதி வைத்ததாக சொல்லப்படும் செட்டில்மெண்ட் ஆவண எண்.1190/1960 ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.எந்த தேதி, எந்த வருடம், எந்த மாதம் மேற்கண்ட் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. அந்த செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்யப்பட்டது ஆகும்.

செட்டில்மெண்ட் ஆவணம் எத்தனை ரூபாய் முத்திரை தாளில் எழுதப்பட்டது என்பது குறித்தும் எத்தனை பக்கங்களை கொண்டது என்பது குறித்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தில் யார், யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்பது குறித்தும், சாட்சிகள் கையொப்பம் செய்துள்ளார்களா என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட் செட்டில்மெண்ட் ஆவணம் எந்தெந்த சொத்து விவரத்திற்கு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை. ஆவணத்தை பார்த்தால் தெரியும்.

என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி பிரகாஷ் ஏற்படுத்திக்கொடுத்த உயில் ஆவணம் குறித்து தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால் கடந்த 27.06.2012 ஆகும். எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஆவணத்தை நான் நேரில் பார்த்துள்ளேன். உயில் ஆவணம் எத்தனை முத்திரை தாளில் எழுதப்பட்டது என்பது குறித்தும், எத்தனை பக்கங்கள் கொண்டது என்பது குறித்தும், சாட்சிகள் அதில் கையொப்பம் செய்துள்ளார்களா என்பது குறித்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

உயில் ஆவணம் குறித்த முழுமையான விவரத்தினை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் உயில் ஏற்பட்ட தேதி மற்றும் ஆவண எண் குறித்து சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாதிகளுக்கும் எனக்கு என்ன உறவு என்றால் எனது தகப்பனாரின் மற்றொரு மனைவி



1ம் வாதி ஆவார். 2 மற்றும் 3 வாதிகள் என் அப்பாவின் மகள்கள் ஆவார்கள். நான் எனது அப்பாவிற்கு நானும் ஒரு வாரிசு ஆவேன். எத்தனையாவது வாரிசு என்று எனக்கு

தெரியாது. 1ம் வாதி கண்ணம்மாள் என் அப்பாவிற்கு எத்தனையாவது மனைவி என்றால் அதுப்பற்றி என் தகப்பனாரை கேட்டால் தான் தெரியும். என் தகப்பனார் தற்போது உயிரோடு இல்லை.

நான் தனிப்பட்ட முறையில் பல சொத்துக்கள் குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மாண்புமிகு திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்ன வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் வழக்கு எண் சரியாக தெரியவில்லை. என் தகப்பனாருக்கு சேரவேண்டிய சொத்துக்களை என்னிடம் ஒப்படைக்கும்படி வழக்கு தாக்கல் செய்தேன். அப்போது தான் என் தகப்பனாருக்கு மற்றொரு மனைவி மற்றும் குழந்தைகள் இருப்பது தெரியவந்தது . அந்த வழக்கை நான் தொடர்ந்து நடத்தவில்லை.

மாண்புமிகு திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் கடந்த 1960-ல் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் குறித்து தாக்கல் செய்யப்பட்டது. மாண்புமிகு திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த வழக்கின் அசல் வழக்கு எண். 4/2012 என்றால் சரிதான். அந்த வழக்கில் என் பாட்டி அலமேலு அம்மாள் என்பவரும் ஒரு பிரதிவாதி என்றால் சரிதான். அதில் மற்றொரு பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் தாயார் ஆவார். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது அலமேலு அம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அலமேலு அம்மாள் இறந்ததற்கு பின்பு 1ம் பிரதிவாதி அதில் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டார் என்றால் சரிதான்.2012 ஆம் வருடம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் உயில் ஆவணத்தின் அடிப்படையில் அவர் தானாகவே பிரதிவாதியாக வழக்கில் சேர்ந்துக்கொண்டு வழக்கை நடத்தினார்.

நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.4/2012 வழக்கானது உயில் ஆவணம் தொடர்புடையது இல்லை என்றால் சரியல்ல. அவற்றை குறித்து சொல்லியுள்ளேன். மேற்கண்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால்



தற்போது அவருக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கை நான் தொடர்ந்து நடத்தாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி எனக்கு எதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.15/2015 ல் தானும் ஒரு பிரதிவாதி என்று சொன்னால் சரியல்ல. அதுபற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 3 வாதிகள் மேற்கண்ட வழக்கில் பிரதிவாதிகளாக இருந்து வருகிறார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.15/2015 வழக்கில் எனக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் 1 முதல் 3 வாதிகள் அசல் வழக்கு எண்.15/2015 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து 1 முதல் 3 வாதிகள் மேல்முறையீடு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட் வழக்கு விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது. 1 முதல் 3 வாதிகள் சொன்னதன் அடிப்படையில் தெரிய வந்தது.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.03.26 12:59:21 +0530

District Munsif

Mannargudi.